செ.வெ.எண்: நாள் :04.07.2017

**தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் (TIIC) நாமக்கல் கிளையின் சார்பில் தொழில் முனைவோர் மற்றும் புதியதாக தொழில் துவங்குவோரை ஊக்குவிக்கும் வகையில் நாமக்கல் மோகனூர் ரோட்டில் உள்ள இளங்கோ திருமண மண்டபத்தில் நடைபெற்ற சிறப்பு தொழிற்கடன் திட்ட முகாமினை நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.ஆசியா மரியம் இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

**------**

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் (**TIIC**) நாமக்கல் கிளையின் சார்பில் தொழில் முனைவோர் மற்றும் புதியதாக தொழில் துவங்குவோரை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு தொழிற்கடன் திட்ட முகாம் நாமக்கல் மோகனூர் ரோட்டில் உள்ள இளங்கோ திருமண மண்டபத்தில் இன்று (04.07.2017 செவ்வாய்கிழமை) நடைபெற்றது. இம்முகாமில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக சென்னை துணைப் பொதுமேலாளர் திரு.பொ.இளங்கோ அவர்கள் திட்ட விளக்கவுரை ஆற்றினார். இம்முகாமிற்கு நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.ஆசியா மரியம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று தொழிற்கடன் திட்ட முகாமினை தொடங்கி வைத்து பேசும் போது தெரிவித்ததாவது,

இளைஞர்கள் தொழில்முனைவோர்களாக உருவாகுவதற்கு அரசு பல்வேறு உதவிகளையும், சலுகைகளையும் மானியத்துடன் கூடிய கடனுதவிகளையும் வழங்கி வருகின்றது. அந்த வகையில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகத்தின் சார்பில் இளைஞர்களுக்கு தொழிற்கடன் வழங்குவதற்கான சிறப்பு முகாம் இன்றைய தினம் நடைபெறுகின்றது. இம்முகாமில் புதிதாக தொழில்தொடங்குவோர் மானியத்துடன் கூடிய கடனுதவி பெறுவதற்கு எவ்வாறு விண்ணப்பிக்கவேண்டும். தமிழ்நாடு தொழில்முதலீட்டுக் கழகத்தின் சார்பில் என்னென்ன வகையான கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதனைப் பெறுவதற்கான தகுதிகள் என்னென்ன என்பது குறித்து இந்த சிறப்பு முகாமில் விளக்கமாக எடுத்துரைக்கப்படுகிறது. இன்றைய இளைஞர்கள், தொழில்முனைவோர்கள், இந்த அரிய வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் சார்பில் பொதுகால கடன் திட்டம் இயந்திரங்கள் நிதியுதவி திட்டம் திறந்தநிலைகாலக்கடன், ஒற்றை சாளரக்கடன், உற்பத்தி நிறுவனம் மற்றும் அரிசி ஆலைகளுக்கு நடைமுறை மூலதனக் கடன், தங்கும் விடுதி மற்றும் உணவுக்கூடம் அமைப்பதற்கான கடனுதவி திட்டம், ஜாப்ஆர்டர் வேலை செய்யும் நிறுவனங்களுக்கு நடைமுறை மூலதனத்திட்டம், மருத்துவமனை கடன் திட்டம், சேமிப்பு கிடங்கு திட்டம், திருமண மண்டபம்/சமூதாய கூடத்திட்டம், வணிக வளாகத்திட்டம், காற்றாலை மின் திட்டம், குறு, சிறு தொழில்நிறுவனங்கள் மூலதனத் திட்டம், பட்டியல் நிதியுதவி திட்டம், தொழில்முனைவோர் வளர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு கடன் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குறுந்தொழில்களுக்கான மானிய உதவி திட்டங்கள், சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான மானிய திட்டம், மின் உற்பத்தி இயந்திர மானியம், வட்டி விகிதத்தில் 3 சதவீத மானியம், சிறப்பு உற்பத்தி பொருள் மூலதன மானியம், கடன்தொடர்புடைய மூலதன மானியம், ஜவுளித்துறை தொழில்நுட்ப மேம்பாட்டு கடனுதவி திட்டம், புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின்கீழ் கடனுதவி போன்ற மானிய உதவி திட்டங்களும் தமிழ்நாடு தொழில்முதலீட்டு கழகத்தின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் அதிக பட்சமாக 30.00 லட்சம் வரையில் கடனுதவி வழங்கப்படுகின்றது.

தமிழகத்திற்கு இந்தாண்டு இதுபோன்ற கடனுதவிகள் வழங்கிட ரூ.1700 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் நாமக்கல் மாவட்டத்திற்கு மட்டும் ரூ.20.00 கோடி கடனுதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு தமிழ்நாடு தொழில்முதலீட்டு கழகத்தின் நாமக்கல் கிளை அலுவலகத்தின் சார்பில் ரூ.13.00 கோடி அளவிற்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எய்திடும் வகையில் பல்வேறு வகையான கடனுதவிகள் வழங்குவதற்கு தமிழ்நாடு தொழில்முதலீட்டு நிறுவனத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. குறிப்பாக தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டமான புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம் (NEEDS) திட்டத்தின்கீழ் படித்த பட்டதாரி, பட்டய படிப்பு, ஐடிஐ படித்த இளைஞர்கள் முதல் தலைமுறை தொழில்முனைவோருக்கு சுயதொழில் துவங்க குறைந்தபட்ச தொழில்முனைவோரின் மூலதனம், 5 சதவீதம் அல்லது 10 சதவீதம் மட்டுமே ஆகும். மேலும் மாநில அரசின் 25 சதவீத மூலதன மானியத்துடன் ரூ.1.00 கோடி வரையிலான புதிய தொழில்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் உற்பத்தி மற்றும் சேவை துறைகளில் புதிய தொழிற்சாலைகள் துவங்கவும், விரிவாக்கம் செய்யும் தனி நிறுவனங்களுக்கு ரூ.15.00 கோடி ரூபாய் வரையிலும் கூட்டு நிறுவனங்களுக்கு ரூ.30.00 கோடி ரூபாய் வரையிலும் கடன் வழங்கப்பட உள்ளது.

இச்சிறப்பு கடன் திட்ட முகாம் வரும் 03.07.2017 தொடங்கி வருகின்ற 07.07.2017 வரை நாமக்கல் சேலம் ரோட்டிலுள்ள தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் கிளை அலுவலகத்தில் நாள்தோறும் நடைபெற்று வருகிறது.

நாமக்கல் மாவட்டத்திலுள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தமிழ்நாடு தொழில்முதலீட்டு கழகத்தின் சார்பில் நடத்தப்படுகின்ற சிறப்பு முகாமினை பயன்படுத்திக்கொண்டு மானிய உதவியுடன் கடனுதவி பெற்று புதிய தொழில் தொடங்கி தங்களை தொழில் அதிபர்களாக உருவாக்கிக்கொள்ள முன்வரவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.ஆசியா மரியம் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட சிறப்பு தொழில்கடன் விழாவில் கடனுதவி வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.ஆசியா மரியம் இ.ஆ.ப., அவர்கள் விண்ணப்பங்களை பெற்று உரிய அலுவலரிடம் வழங்கினார்.

இச்சிறப்பு முகாமில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக சேலம் மண்டல மேலாளர் திரு.உ.இராமசாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இச்சிறப்பு முகாமில் நாமக்கல் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.க.இராசு, நாமக்கல் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் சங்கத்தலைவர் திரு.கோஸ்டல் ந.இளங்கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக நாமக்கல் கிளை மேலாளர் திரு.கோ.சகாதேவன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இம்முகாமில் நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், தொழில்முனைவோர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**ஓம்/-மு.ஆசியா மரியம் இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**நாமக்கல் மாவட்டம்.**